தஞ்சை மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் வை.சிவசங்கரன், என். கௌதமன், பேரூர் செயலாளர் சி.நாகராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.முகில்வேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

“முதலமைச்சரின் தாயுமானவர்” திட்டத்தின் கீழ்

பெரம்பலூர் மாவட்டத்தில் 15,764 பயனாளிகள் பயன்!

போக்குவரத்து – மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

பெரம்பலூர், ஆக. 15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை” சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகரில் தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண் ராஜ் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் ஔவையார் தெரு, வெங்கடேசபுரம் மற்றும் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட தேவையூர் ஆகிய பகுதிகளில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே நேரில் சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கினார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வயது முதிர்ந்தவர்களிடம் குடிமைப்பொருட்களை வழங்கி கூறுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களைப் போன்ற வயது முதிர்ந்தோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் சிரமத்தை உணர்ந்து, அவர்களின் வீடு தேடி சென்று பொது விநியோகத்திட்டத்தின் மூலமாக அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

எனவேதான் உங்களுக்கு இந்த குடிமைப் பொருட்கள் வீடு தேடி வந்து வழங்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என தெரிவித்தார்.

பொருட்களைப் பெற்றுக் கொண்ட திருமதி செல்லம்மாள் கூறுகையில், என்னுடைய கணவர் இறந்து பல ஆண்டுகளாகின்றது. குழந்தைகளும் இல்லை. யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக வசித்து வருகிறேன். வயது முதிர்வின் காரணமாக ரேசன் கடைக்கு நடந்து சென்றுகூட பொருள் வாங்க இயலாத நிலையில், மிகவும் சிரமப்பட்டு வந்த எனக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் என்னுடைய வீட்டிற்கே குடிமைப் பொருட்களை அமைச்சரே வந்து வழங்கியது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னைப் போன்ற ஆதரவற்றோர்களுக்கு ஆதரவளிக்கும் திட்டமாக இத்திட்டம் உள்ளது. எனக்கு மகன், மகள் இல்லாத குறையை நீக்கி மகனாக என் வீட்டிற்கே அரிசி, பருப்பு பொருட்களை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதாக தெரிவித்தார்.

பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவு பொருட்கள் பெறுவதில் சிரமமாக இருப்பதை உணர்ந்து, அவர்களது இல்லம் தேடி உணவுப்பொருட்கள் வழங்கும் வகையில் தாயுமானவர் என்ற திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கும் வகையில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமங்கலம், வெங்கடேசபுரம் மற்றும் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட தேவையூர் ஆகிய பகுதிகளில், 70 வயது கடந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இது ஒரு புரட்சிகரமான திட்டம். மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் உணவுப் பொருட்கள் அவர்களது வீட்டிற்கே சென்று வழங்கப்படும் என்பது திட்டத்தினுடைய சிறப்பாகும். எனவே வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் இனிவரும் காலங்களில் எவ்வித சிரமமும் இன்றி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். பெரம்பலூர் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 15,764 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை முதன் முதலாக செயல்படுத்தினார்கள். விவசாயிகளுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதனை செய்வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. சூழ்நிலைக்கேற்றவாறு விவசாயிகளுக்கு தடை இல்லாமல் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு உண்டான நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், போக்குவரத்து துறையில் காலியாக உள்ள 3,200 பணியிடங்களை நிரப்பும் வகையில் எழுத்து தேர்வு முடிவு பெற்றுள்ளது. மதிப்பெண் அடிப்படையில் அவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, 3,200 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். என தெரிவித்தார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் க.பாண்டியன், துணை பதிவாளர்கள் . பா.சிவக்குமார் (பொ.வி.தி), மாவட்ட வழங்கல் அலுவலர் சக்திவேல், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், நகர்மன்றத் துணைத் தலைவர் து.ஆதவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம். ராஜ்குமார், பா.துரைசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம்,

பெரம்பலூர் வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், பெரம்பலூர் 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி ஜெயப்பிரியா மணிவாசகம் மற்றும் அரசு அலுவலர்கள் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தில், திருவாரூர் தெற்கு வீதி நியாய விலைக்கடையில் பொருட்களை வழங்க நகரும் வாகனத்தை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கொடி அசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன்,தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் நா.இளையராஜா , நகர்மன்ற தலைவர் புவனப்ரியா, பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நாகை மாவட்டம் நாகை நகரம் நாகை பெருமாள் தெற்கு மடாவளாகத்தில் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு வீடு தேடி சென்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் ஆகியோர் வழங்கினார்கள். உடன் நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் இரா. மாரிமுத்து, ஜி.மனோகரன், நகர்மன்ற உறுப்பினர் சத்தியவாணி, எஸ்.எம்.ஏ.கணேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் மதியழகன் மற்றும் பலர் உள்ளனர்.

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் சட்டமன்றத் தொகுதி முஸ்லிம் தெருவைச் சேர்ந்த அ.முஹம்மது ரபீக்குக்கு மருத்துவ செலவுக்காக தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூ.25,000/– மதிப்புள்ள காசோலையை தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பயனாளியிடம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ பிரகாஷ் அவர்கள் வழங்கினார்.

நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில்

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை சார்பில் தொல்குடி திட்டக் கள ஆய்வு!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல். ஆக. 15–

நாமக்கல் மாவட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், பழங்குடியினர் மக்கள் சந்திப்பு மற்றும் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் அரசின் திட்டப்பணிகள் குறித்த கள ஆய்வு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் கலந்துகொண்ட, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், துறை அரசு செயலாளர் க. இலட்சுமி பிரியா, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச. அண்ணாதுரை ஆகியோர் உடன் இணைந்து, இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் மூலப்பள்ளிப்பட்டி, குரங்காத்துபள்ளம், கார்கூடல்பட்டி, பிலிப்பாகுட்டை, பெரப்பன் சோலை, கொளக்கமேடு ஆகிய கிராமங்களில், வசிக்கும் பழங்குடியினர் மக்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது, இத்துறை மூலம், வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் நலத்திட்டங்கள், திட்டப் பணிகள் ஆகியவை முறையாக பழங்குடியின மக்களுக்கு சென்று சேர்ந்துள்ளதா ? என்றும், மேலும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து பொதுமக்களிடம் 200 க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டதுடன், இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் கள ஆய்வு செய்தார்.

இதில், பெரப்பன்சோலை ஊராட்சியில் பழங்குடியினர் குடியிருப்பு மயானத்திற்கு தார்ச் சாலை, தடுப்புச் சுவர் கட்டுமானப் பணிகள், சிமெண்ட் கான்கிரீட் சாலை பேவர் பிளாக் கற்கள் அமைக்கும் பணி, மூலக்குறிச்சி ஊராட்சி காமராஜ் நகர் பகுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்தல், எரிமேடைசுற்றுச் சுவர் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், மூலக்குறிச்சி ஊராட்சியில் உயர் கோபுரம் மின்விளக்கு அமைத்தல், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர்கள் அமைத்தல், புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து மின் மோட்டார் இதர உபகரணங்கள் அமைத்தல், துணை சுகாதார நிலையம் கட்டும் பணி, பெரிய வரகூர் கோம்பை மயானத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மின் மோட்டார் அமைத்தல், சுற்றுச்சூழல் எரிமேடை, சாய்வு தளம் அமைத்தல் ஆகிய பணிகளை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், அரசு செயலாளர் மற்றும் துறை இயக்குநர் ஆகியோருடன் இணைந்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார், இத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசு செயல்படுத்தி வரும் திட்டப் பணிகளை, உரிய காலத்தில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நாமக்கல் மாவட்ட தாட்கோ மேலாளரும், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலருமான பா. இராமசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கே.எஸ்.சுரேஷ்குமார், நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, அரசு துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக செயல்படும்

அரசு - தனியார் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மக்களவையில் – க.செல்வம் கேள்வி!

புதுடெல்லி. ஆக. 15-

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் 11-08-2025 அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்திற்கு பின் வரும் கேள்விகளை எழுப்பினார்.

(அ) தமிழ்நாட்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் (CTS) கீழ் செயல்படும் அரசு மற்றும் தனியார் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களின் (ITIS) எண்ணிக்கை, மாவட்ட வாரியாக. (ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு மற்றும் வார்த்தக வாரியாக, தமிழ்நாட்டில் (CTS) இன் கீழ் சேர்ந்த மொத்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை?

(இ) தமிழ்நாட்டடில் CTS இன் கீழ் தற்போதுள்ள ITI-களை மேம்படுத்த அல்லது நவீனமயமாக்க அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால் நிதி மற்றும் காலக்கெடு உள்ளிட்ட விவரங்கள். () தமிழ்நாட்டின் பின்தங்கிய மற்றும் வளர்ச்சியடையாத மாவட்டங்களுக்கு இந்தத் திட்டத்தின் பலன்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா அரசு (உ) தமிழ்நாட்டில் CTS படிப்புகளில் சேரும் SC, ST, OBC மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்கு ஏதேனும் நிதி அல்லது கல்வி உதவி வழங்கப்படுகிறதா.

(ஊ) தமிழ்நாட்டில் கிராமப்புற மற்றும் விளிம்புநிலை சமூகங்களை சேர்ந்த மாணவர்களின் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பை அதிகரிக்க CTS-இன் கீழ் அரசு எடுத்த/எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இதந்மு அமைச்சகம் சார்பில் அளித்த பதில்கள் வருமாறு

(அ) திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் (MSDE) கீழ் இயங்கும் பயிற்சி இயக்குநரகம் (DGT), நாடு தழுவிய தொழில்துறை பயிற்சி நிறுவனங்களின் (ITIs) வலையமைப்பு மூலம் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தை (CTS) செயல்படுத்துகிறது. இதன் மூலம் நாட்டின் இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு ஏற்படுகிறது.

தற்போது நாட்டில் 14,615 ITI-க்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் 3,316 அரசு ITI-க்கள் மற்றும் 11,299 தனியார் ITI-க்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 456 ITI-க்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் 93 அரசு ITI-க்கள் மற்றும் 363 தனியார் ITI-க்கள். தமிழ்நாட்டில் மாவட்ட வாரியான ITI-க்கள் எண்ணிக்ககை இணைப்பு-1ல் உள்ளது.

(ஆ) 2020-21 முதல் 2024-25 வரை தமிழ்நாட்டில் CTS இன் கீழ் உள்ள ITI-களில் மொத்தம் 1,67,481 பயிற்சியாளர்கள் சேர்ந்துள்ளனர். 2020-21 வரையிலான அமர்வுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் CTS-இன் கீழ் உள்ள ITI-களில் வர்த்தக வாரியாக, ஆண்டு வாரியாக சேர்க்கை இணைப்பு-2ல் உள்ளது.

(இ) ரூ.60,000/- கோடி (மத்திய பங்கு ரூ.30,000/- கோடி மற்றும் தொழில்துறை பங்கு ரூ.10,000/- கோடி) மதிப்பீட்டில், ITI-க்கள் மேம்படுத்துவதற்கும், திறன் மேம்பாட்டுக்கான தேசிய சிறப்பு மையங்களை (NCOES) அமைப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு மாநிலம் உட்பட நாடு முழுவதும் மைய மற்றும் பேச்சு ஏற்பாடுகள் மூலம் 1,000 ITI -க்களை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் பொருளாதாரத்தில் மாறும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தொழிலதுறை உற்பத்திறனை அதிகரிப்பதற்கும் எதிர்காலத்தில் தயாராக இருக்கும் திறமையான பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன்.

வளர்ந்து வரும் பகுதிகளை நிவர்த்தி செய்வதற்காக புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதை மையமாகக் கொண்டு பாடநெறி உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பு தொழில்துறை திறன் தேவைகளுடன் சீரமைக்கப்படும்.

இது தவிர, தமிழ்நாடு உட்பட மாநில அரசுகள், அரசு ITI-க்களை, தொழில் 4.0 தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் நவீன உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய தொழில்நுட்ப மையங்களை/மையங்களாக மாற்றுவதற்காக, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகின்றன. திறன் இடைவெளியைக் குறைப்பதற்கும், வளர்ந்து வரும் தொழில்துறை நிலப்பரப்பின் தேவைகளுக்க மாணவர்களைத் தயார்படுத்துவதற்கும். அரசு ITI-க்களை அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறையுடன் இணைந்த பாடத்திட்டத்துடன் சித்தப்படுத்து வதே இந்த ஒத்துழைப்புகளின் நோக்கமாகும்.

(ஈ) தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ITI-க்களில், பின்தங்கிய மற்றும் வளர்ச்சியடையாத மாவட்டங்கள் உட்பட CTS செயல்படுத்தப்படுகின்றது. மாநிலத்தில் உள்ள மொத்த 456 ITI-க்களில், 410 ITI-க்கள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன.

மேலும், DGT இணைப்பு விதிமுறைகளிலும் தளர்வு அளிக்கிறது. குறிப்பாக தொகுதி/நகராட்சி மட்டத்தில் சேவை செய்யப்படாத பகுதிகளில் புதிய ITI-களை நிறுவுவதற்கத் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு மற்றும் குறைந்தபட்ச வர்த்தகங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில்.

(உ) ITI-க்களின் நிதி கட்டுப்பாடு மற்றும் அன்றாட நிர்வாகம் அந்தந்த மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களின் அதிகார வரம்பிற்குள் வருகிறது. அதே நேரத்தில் இணைப்புக்கான அளவுகோல்களை அமைத்தல், தேர்வுகளை நடத்துதல் சான்றிதழ்களை வழங்குவதல் மற்றும் பாடத்திட்டங்களை வடிவமைத்தல் போன்ற கொள்கை விஷயங்கள் மத்திய அரசின் பொறுப்புகளாகும். ITI பயிற்சி பெறுபவர்களுக்கு MSDE எந்த நிதி

உதவியையும் வழங்குவதில்லை. இருப்பினும், தமிழ்நாடு அரசு, SC, ST OBC மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட, தமிழக அரசு ITI-க்களில் பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும்உதவித்தொகையை அதன் சொந்த முயற்சிகள் மூலம் வழங்குகிறது.

(ஊ) பள்ளிகளில் தொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், எஃப் எம் வானொலி, அச்சு ஊடகங்கள், தொகுதி அளவிலான அலுவலங்கள் மற்றும் கிராமாப்புறங்களில் உள்ளூர் சமூக ஈடுபாடு மூலம் வெகுஜன வெளிநடவடிக்கை முயற்சிகள் மூலம் ITI-க்களில் திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு உட்பட மாநில/யூனியன் பிரதேச அளவில் மாநில திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் குழுக்கள் (SSDECS) அமைக்கப்பட்டுள்ளன.

ITI-க்களில் இவை தவிர, தமிழ்நாடு அரசு, அதன் மாநிலக் கொள்கையின்படி, அரசு சேர்க்கையில் விளிம்புநிலைப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடஒதுக்கீட்டை அமல்படுத்துகிறது மற்றும் அரசு ITI-க்களில் பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக உதவித்தொகையை வழங்குகிறது.

இவ்வாறு ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்டம் ஜிட்டாண்ட அள்ளி பேருந்து நிறுத்தம் அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு நிகழ்ச்சி ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் எம்விடி.கோபால் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில நிர்வாகி கூடப்பட்டி சுப்பிரமணி,அவைத் தலைவர் முனுசாமி,சிவாஜி, நடராஜ், முனிரத்தினம்,ஜேஎம் சக்தி,எம்கே.முனிராஜ்,யுவராஜ், கணேசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.